பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

16 02 2025 **SUNDAY** **12.40 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- அர்ஜென்டினா உடனான பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாக இருந்தது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.
- காசி தமிழ் சங்கமம் நிகழ்ச்சி ஒரே பாரதம் - உன்னத பாரதம் என்ற உணர்வை போற்றி ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளது என்று மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.
- புதுதில்லி ரயில் நிலைய கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 10 லட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்படும் என்று ரயில்வே அறிவித்துள்ளது.
- தமிழகத்தில் அரசுப்பள்ளி மாணவர்களின் எதிர்காலத்தை கேள்விக்குரியாக்கும் வகையில் மாநில அரசின் இருமொழி கொள்கை உள்ளதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.
- ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் ஈஸ்ட் பெங்கால் அணி – முகமதன் அணியை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**<<<<<>>>>**

அர்ஜென்டினா உடனான பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாக இருந்தது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், ஜெர்மனியில் நடைபெற்றுவரும் முனிச் பாதுகாப்பு உச்சிமாநாட்டிற்கு இடையே அர்ஜென்டினா வெளியுறவுத்துறை அமைச்சர் திரு **Gerardo Werthein**-ஐ சந்தித்து பேசியுள்ளதாக கூறியுள்ளார்.

இந்த பேச்சுவார்த்தையின்போது வர்த்தகம், முதலீடு போன்ற துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனைத்தொடர்ந்து, டென்மார்க், ஆஸ்திரியா, மங்கோலியா, நார்வே உள்ளிட்ட நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களையும் சந்தித்து பேசியதாக திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>

தில்லி காவல்துறையின் 78-ஆவது நிறுவன தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

தில்லியில் உள்ள கிங்ஸ்வே முகாமில் நடைபெற்ற காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை உள்துறை இணையமைச்சர் திரு நித்யானந்த ராய் ஏற்றுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், நாட்டிலேயே தில்லி காவல்துறை சிறப்பாக செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

ஜி-20 உச்சிமாநாடு மற்றும் கோவிட் பெருந்தொற்று காலங்களில் காவல்துறையினரின் செயல்பாடுகள் பாராட்டுதலுக்குரியது என்று அவர் கூறினார்.

குற்றச்செயல்களை தடுத்து சட்டம் - ஒழுங்கை பாதுகாப்பதில் தில்லி காவல்துறையினர் குறிப்பிடத்தக்க பங்காற்றி வருவதாக திரு நித்யானந்த ராய் தெரிவித்தார்.

<<<<<>>>>

காசி தமிழ் சங்கமம் நிகழ்ச்சி ஒரே பாரதம் - உன்னத பாரதம் என்ற உணர்வை போற்றி ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளது என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவிட்டுள்ள அவர், தமிழகம் - காசி இடையே நிலவிவரும் தொன்றுதொட்ட கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையில் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம், ஆன்மிகம், கலாச்சாரம் மற்றும் வரலாற்று சிறப்புமிக்க தொடர்புகளை ஒருங்கிணைப்பதாக அவர் கூறியுள்ளார்.

காசி தமிழ் சங்கமம் நிகழ்ச்சியில் அனைவரும் பங்கேற்குமாறு திரு எல். முருகன் அழைப்பு விடுத்துள்ளார்.

இதனிடையே, காசி தமிழ்ச் சங்கமத்தில் பங்கேற்பதற்காக கோவையில் இருந்து 85 பேர் கொண்ட குழுவினருக்கு ரயில்வே சார்பில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - ஹரிஹரன் - 42 செகண்ட்ஸ்)*

காசி தமிழ் சங்கமத்தில் பங்கேற்பதற்காக முதல் முறையாக செல்வது மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளதாக ஈரோட்டை சேர்ந்த பயணி ஒருவர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - பயணி – 16 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>

புதுதில்லியில் நடைபெற்றுவரும் சர்வதேச ஜவுளிக் கண்காட்சியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று உரையாற்றுகிறார்.

பாரத் மண்டபத்தில் கடந்த 14ஆம் தேதி தொடங்கிய இக்கண்காட்சி, நாளை வரை நடைபெற உள்ளது.

சர்வதேச அளவில் ஜவுளித்துறையில் எதிர்கால வாய்ப்புகள் குறித்த கருத்தரங்கமும் நடைபெறுகிறது.

இத்துறையில் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தொழில் தொடங்குவதற்கான வாய்ப்புகள் குறித்தும் விவாதிக்கப்படுகிறது.

இதில், சர்வதேச நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகள், கொள்கை வகுப்பாளர்கள் உட்பட 120-க்கும் மேற்பட்ட நாடுகளை சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.

ஜவுளித்தொழில் சார்ந்த பொருட்களும், இயந்திரங்களும் இதில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

<<<<<>>>>

பழங்குடியின மக்களின் கலாச்சாரம் குறித்த ஆதி மஹோத்சவ நிகழ்ச்சியை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

பழங்குடியினர் நல அமைச்சகம் சார்பில் வரும் 24ஆம் தேதி வரை நடைபெற உள்ள இந்த மஹோத்சவத்தில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த பழங்குடியின கைவினைஞர்களின் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சி நடைபெற உள்ளது.

இலங்கை, இந்தோனேஷியா உள்ளிட்ட நாடுகளை சேர்ந்த பிரதிநிதிகளும் பங்கேற்கின்றனர்.

<<<<<>>>>

புதுதில்லி ரயில் நிலையத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 18-ஆக அதிகரித்துள்ளது.

பிரயாக்ராஜ் மகா கும்பமேளாவில் பங்கேற்பதற்காக நேற்றிரவு அதிக அளவிலான மக்கள் ரயில் நிலையத்தில் திரண்டதையடுத்து நெரிசல் ஏற்பட்டது.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 10 லட்சம் ரூபாயும், படுகாயமடைந்தவர்களுக்கு தலா இரண்டரை லட்சம் ரூபாயும், சிறிய அளவில் காயமடைந்தவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும் நிவாரண உதவி வழங்கப்படும் என்று ரயில்வே அறிவித்துள்ளது.

இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படாமல் தவிர்க்கும் வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

<<<<<>>>>

உத்தரப்பிரதேச மாநிலம் பூர்வாஞ்சல் நெடுஞ்சாலையில் நேரிட்ட சாலை விபத்தில் ஒரு பெண் உட்பட நான்கு பேர் உயிரிழந்தனர். 6 பேர் காயமடைந்துள்ளனர்.

சத்தீஸ்கரிலிருந்து புறப்பட்ட பேருந்தும், மகாராஷ்ட்ராவிலிருந்து சென்று கொண்டிருந்த டெம்போ வேனும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் லக்னோவில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

தமிழகத்தில் அரசுப்பள்ளி மாணவர்களின் எதிர்காலத்தை கேள்விக்குரியாக்கும் வகையில் மாநில அரசின் இருமொழி கொள்கை உள்ளதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக, அக்கட்சியின் மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், மாறிவரும் சூழலுக்கு ஏற்ப கல்வி முறையை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

அரசு பள்ளிகளில் மூன்றாவது மொழியை கற்பிப்பது மாணவர்களின் எதிர்காலத்திற்கு உதவிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தனியார் மற்றும் சிபிஎஸ்இ பள்ளிகளில் இந்தி மூன்றாவது மொழியாக கற்பிக்கப்பட்டு வருவதை திரு அண்ணாமலை சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<>>>>

குஜராத்தில் பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் நடைபெற்று வருகிறது.

காலை ஏழு மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு, மாலை ஆறு மணிவரை நடைபெறுகிறது.

இத்தேர்தலில் மொத்தம் 5 ஆயிரத்து 84 பேர் போட்டியிடுகின்றனர்.

170 உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள 2 ஆயிரத்து 178 பதவிகளுக்கு தேர்தல் நடைபெறுகிறது. இதில் 213 வேட்பாளர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

வாக்குப்பதிவு அமைதியாகவும், சுமூகமாகவும் நடைபெறுவதற்கு விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

10 ஆயிரத்திற்கும் அதிகமான காவல்துறையினர் பாதுகாப்புப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதில் பதிவாகும் வாக்குகள் நாளை மறுநாள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

<<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் ஈஸ்ட் பெங்கால் அணி – முகமதன் அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

<<<<<>>>>

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் குஜராத் - உத்தரப்பிரதேச அணியை எதிர்கொள்கிறது.

வதோதராவில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

<<<<<>>>>

ப்ரோ லீக் ஹாக்கிப் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் இந்தியா - ஸ்பெயினை எதிர்கொள்கிறது.

புவனேஸ்வரில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

முன்னதாக நடைபெறும் மகளிர் பிரிவு ஆட்டத்தில் இந்தியா - இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

இப்போட்டி மாலை மணி 5.15க்கு நடைபெறுகிறது.

<<<<<>>>>